பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரமோதூத ஹூ பங்குனி ௴ 20 உ. புதன்கிழமை [03-04-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 130

# 200 படையினர் ஒருமாதத்தில் பலி!

## விடுதலைப் புலிகளின் தாக்குதல் தீவிரம்

கொழும்பு, ஏப்ரல் 3

ஸ்ரீலங்கா படையினர் மீதான தாக்குதல்களை விடுதலைப் புலிகள் தீவிரப்படுத்தியிருப்பதை அடுத்து கடந்த ஒருமாத காலத்திற்குள் இருநூறுக்கும் அதிகமான படையினர் உயிரிழந்திருக்கின்றனர். மேலும் பல நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் படுகாயமடைந்துள்ளனர்.

ஏஜென்ஸி செய்திகள் இத்தகவலைத் தெரிவித்தன.

அமைச்சர் ரஞ்சன் உயிரிழந்த குண்டு வெடிப்புச் சம்பவத்திலும் மற்றும் தோப்பூர், திரியாய், நீலாவெளி, குச்சவெளி, வெல்லாவெளி, மட்டக்களப்பை அண்டிய பகுதிகள், முல்லைத்தீவு, மன்னார், சிலாவத்துறைப் பகுதி, வவுனியாப் பகுதி, ஆனையிறவு, பலாலி, ஊர்காவற்றுறை காரைநகர் ஆகிய இடங்களில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களிலும்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## அரசின் உயர் நிலைக்குழு அடுத்த வாரம் புதுடில்லிக்கு!

கொழும்பு, ஏப். 3

வெளியுறவுச் செயலாளர் பேர்னாட் திலகரத்தினா தலைமையில் இலங்கை அரசின் உயர் நிலைக்குழு ஒன்று அடுத்த வாரம் புதுடில்லிக்கு செல்லவுள்ளது.

இலங்கை - இந்திய பொருளாதார கூட்டு ஆணைக்குழுவின் கூட்டத்தில் இந்தக்குழு கலந்து கொள்ளும் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வரும் யுத்தம் குறித்து இந்திய அரசுடன் பேச்சுக்கள் நடத்தப்படுமா என்று கேட்டதற்கு, கொழும்பு அரச வட்டாரங்கள் பதிலளிக்க மறுத்து விட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைத் தூதுக்குழுவில் நிதி, வர்த்தக, கைத்தொழில் அமைச்சுக்களின் செயலாளர்களும் இடம்பெறுவர். [உ-எ]

## தொழிலுக்கு சென்ற மீனவர் நீதிமன்றத்தில் ஆஜர்!

தாளையடி, ஏப். 3

வடமராட்சிக் கடலில், கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களுக்குத் தண்டமும் விதிக்கப்பட்டது.

உடுத்துறையைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் தொழிலுக்குச் சென்று சில நாட்கள் திரும்பவில்லை. அவர்களைக் கடற்படையினர் கைது செய்ததாகப் பின்னர் தெரிய வந்தது.

குடும்பஸ்தர்களான அவர்களைக் கடற்படையினர், திருகோணமலையில் இராணுவத்திடம் ஒப்படைத்தனர். இராணுவ விசாரணையின் பின்னர் அவர்கள் சுங்கப் பகுதியினராலும் விசாரிக்கப்பட்டனர்.

அதன் பின்னரே அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுத் தண்டம் விதிக்கப்பட்டது.

சுமார் ஒரு மாத காலத்தின் பின்னர் அவர்கள் இப்போது வீடு திரும்பியுள்ளனர்.

[அ-144]

## ஆனையிறவிலிருந்து நேற்று ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், ஏப். 3

ஆனையிறவு முகாமிலிருந்து நேற்றும் குடியிருப்புப்பகுதிகளை நோக்கி பரவலாக ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத் தாக்குதலில் இயக்கச்சி சங்கத்தா வயல் பகுதியில் விழுந்த ஷெல்லினால் ஒருவர் காயமடைந்தார். பல வீடுகள் சேதமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் சங்கத்தாவயலைச் சேர்ந்த பதினாறு வயது இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [அ-15]

## பூவரசங்குளத்தில் நேற்று பொம்மர் தாக்கி 2 பேர் பலி!

யாழ்ப்பாணம், ஏப் 3

நேற்றுக்காலை 8 30 மணியளவில் வவுனியா பூவரசங்குளத்தில் உள்ள பாடசாலைக்கு முன்னால் இரண்டு பொம்மர்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் உயிரிழந்தனர். மேலும் இருவர் காயமடைந்தனர்.

இந்தக் குண்டு வீச்சுத் தாக்குதலினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து மேலதிக விவரங்கள் கிடைக்கவில்லை

## காரைநகர்ச் சம்பவத்தில் மூன்று புலிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஏப். 3

காரைநகரில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மூவர் வீரமரணமடைந்தனர்.

நேற்று மாலை சீநோர் காவல் அரணிலிருந்து படையினர் வெளியேற முற்பட்ட போதே இந்த மோதல் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் பொஸ்கோ [கனகடி ஸ்ரீரஞ்சன் - துன்னாலை, சரவெட்டி], சேது [வீரசிங்கம் கிருபாகரன் - வேலணை மேற்கு, நாரந்தனை] ஆகியோரும் மற்றும் நிதி என்ற போராளியுமே வீரமரணமடைந்தனர்.

காரைநகர் டிப்போ பக்கமாகவும் கடும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன.

[உ]

## அதிகாலை வேளையில் அவ்ரோ குண்டு வீச்சு!

காரைநகர்ப் பகுதியில் நேற்று அதிகாலை 2-30 மணியளவில் அவ்ரோவிலிருந்து குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஐந்துவரையான பீப்பாய்க் குண்டுகள் வீசப்பட்டன. இக்குண்டுகள் வெடித்ததால் சில வீடுகள் சேதமடைந்தன. கடற் பகுதியில் விழுந்த ஒரு பீப்பாய்க் குண்டு வெடிக்கவில்லை.

இதே சமயம் நேற்று அதிகாலை இப்பகுதியில் ஹெலிக்கொப்டரிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது ஆனால் இத்தாக்குதலினால் பெரும் சேதம் ஏதும் ஏற்பட்டதாகத் தெரிய வரவில்லை.

நேற்று முன்தினம் இரவு காரைநகர்ப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் ஐந்து படையினர் காயமடைந்ததாக ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

[உ-15]

## படையினர் சடலங்கள் நேற்று பருத்தித்துறையில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 3

மன்னார் வேப்பங்குளத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த படையினரில் 23 பேரின் சடலங்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டன.

நல்லூர் முத்திரைச் சந்தையில் நேற்று முன்தினம் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த பிரேதாப சடலங்களை, விடுதலைப் புலிகள் நேற்று நண்பகல் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் யாழ்ப்பாணத்தில் வைத்து ஒப்படைத்தனர்.

செஞ்சிலுவைச் சங்கத்தினர் சடலங்களை யாழ். ஆஸ்பத்திரி லொறிகள் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்துச் சென்றனர்.

அங்கு இறங்குதுறையில் இருந்து இழுவைப் படகு [பார்ஜ்] ஒன்றின் மூலம், கடலில் தூரத்தே நின்ற கடற்படைப் படகிற்குச் சடலங்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

நேற்று மாலை சுமார் 5 30 மணியளவில் செஞ்சிலுவைச் சங்கத்தினர் சடலங்களைக் கடற்படைப் படகில் ஒப்படைத்தனர்

சடலங்களிலிருந்து வீசிய துர்நாற்றத்தையும் பொருட்படுத்தாது, சடலங்கள் கடற்படைப் படகுக்கு எடுத்துச் செல்லப்பட்டதை பருத்தித்துறை இறங்குதுறையில் நின்று ஏராளமான மக்கள் பார்வையிட்டனர்.

[அ-15]

## பலாலியிலும் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 3

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று மாலை இராணுவத்தினர் கிழக்குப் பக்கமாக முன்னேற முயன்ற சமயம் விடுதலைப் புலிகள் இவர்கள் மீது தாக்குதலை மேற் கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பின்னடைந்த இராணுவத்தினர் பின்னர் வளலாய் தொண்டமானாறு பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலை மேற் கொண்டனர். [உ-15]

## உணவு முத்திரை பரிசீலனை; பூர்த்தி செய்ய உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப். 3

வறுமை நிவாரண உணவு முத்திரை பெறும் குடும்பங்களை மீள இனங்காணும் வேலைகளை ஏப்ரல் 12 ஆம் திகதிக்கு முன்னதாகப் பூர்த்தி செய்யும்படி உதவி அரசாங்க அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த வேலைகளைச் செய்து முடிப்பதற்காக உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவு தோறும் விசேட குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

குழுக்கள் தொடர்பான விளக்கங்களைக் கொண்ட சுற்றுநிருபம் யாழ். செயலக சமூக சேவைப் பிரிவுக்கு கிடைத்துள்ளது.

அதன்படி ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் இரு குழுக்கள் என்ற அடிப்படையில் 10 பேர் கொண்ட குழுக்கள் அமைக்கப்படவேண்டும்.

ஒரே வீட்டில் ஒன்றாக வசிக்கும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்பட வேண்டும் என்று புதிய சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[அ-5]

## முச்சந்தி முரளி



அப்போ... [illegible] லாபம் கிடைக்கப் போகுது போல......!

## சிலாபம் கற்பிட்டியில் மசகு எண்ணெய்ப் படிவு?

கொழும்பு, ஏப். 3

சிலாபம்—கற்பிட்டி, தலைவில்லுப் பகுதிக் கடற்கரையோரமாக மசகு எண்ணெய் காணப்பட்டதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

சுற்றாடல் மற்றும் விஞ்ஞான ஆய்வாளர்கள் அப்பகுதிக்கு விரைந்துள்ளதாகவும் அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது. [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்டியல் திருட்டு

புங்குடுதீவில் தற்போது உண்டியல் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை புங்குடுதீவு நுழைவாயில் பிள்ளையார் கோவில், மடத்துவெளி வயலூர் முருகன் கோவில் ஆகியனவற்றின் உண்டியல்கள் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது. [இ-131]

# பயிற்சிக் கல்லூரிகள் மூடப்படுவதும் கல்வித் தரம் குறையக் காரணம்

### வணசிங்கா நினைவுக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஏப் 3

தமிழ் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து வந்த ஆசிரிய பயிற்சிக்கல்லூரிகள் படிப்படியாக மூடப்பட்டு வந்ததும் தமிழர்களின் கல்வித் தரம் வீழ்ச்சி அடைந்ததற்குக் காரணம் ஆகும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். பலகலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் இடம் பெற்ற அமரர் டி. எஸ். கே வணசிங்காவின் நினைவுப் பேருரையில் கலாநிதி சபா ஜெயராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் முன்வரை விட தற்போது பாடசாலைகளின் எண்ணிக்கையும், மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ள போதும் சமூகத்தின் தேவைக்கேற்ப கல்வியின் தரம் மேம்படவில்லை.

இதன் காரணமாக, பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்களின் எதிர்காலம் அவர்களிற்கு உயர் கல்வி கற்க சந்தர்ப்பம் கிடைக்காத போது கேள்விக் குறியாகின்றது. எனவே வாழ்க்கைத் தேவைக்கேற்ப கல்வி புகட்டப்படல் வேண்டும்.


இப்படி அவர் கூறினார்.

கலாநிதி சி. மௌனகுரு பேசுகையில் ''அமரர் வணசிங்காவினது தொழிற்சங்க நடவடிக்கைகள் சம்பந்தமாக யாழ். பல்கலைக்கழகத்தின் கல்வியியற் புலத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றார்.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தனது வரவேற்பு உரையில் தமிழ் மொழி நடைமுறையாக்கலை அமுல்படுத்த தமிழ்க்கல்வி அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டும். இதற்காக திரு. வணசிங்கா நீண்ட காலம் உழைத்தார் என்றார்.

இந் நிகழ்ச்சியில் அமரர் டி. கே. எஸ். வணசிங்காவின் உருவப்படம் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. [இ-த]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் பத்மநாதன் சசிகலா

மலர்வு: 9 06 1969 உதிர்வு: 14-3-1990

அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் ஒளிவிளக்காய், கல்வியில் மேன்மையாய், விளையாட்டில் ஓர் வீராங்கனையாகத் திழ்ந்து எங்களை எல்லாம் வழிகாட்டியதுடன் திடீர் என எம்மை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத் துயில்கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெரியபளை, பளை. அன்புப் பெற்றோர், சகோதரர்கள் உற்றார், உறவினர்கள் நண்பர்கள். [16250]

## தொழிற்சாலை இடம்மாற்ற உத்தரவு

கொழும்பு, ஏப். 3

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மீண்டும் எப்போது இயங்கச் செய்வது என்பது உறுதியற்றதாக இருப்பதால் விரைவில் வேறொரு இரசாயனத் தொழிற்சாலை வடக்கு-கிழக்கு தவிர்ந்த வேறு ஓர் இடத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

கைத்தொழில் துணை அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி, இரசாயனக் கூட்டுத்தாபன பணிப்பாளர் சபைக்கு மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார். [இ-எ]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### ரோகிணி விஸ்வலிங்கம் [ரோகா]

தோற்றம்: 22 - 10 - 1967 மறைவு: 15 - 03 - 1990

திதி: 03 — 04 — 1991

ஆண்டொன்று சென்றதம்மா நீயின்றி
ஆனாலும் வாழுகின்றாய் எம் நெஞ்சமதில்
உன் குரல் கேட்டு மலர்ந்திருந்த உன் குடும்பம்
உன் சுவடும் இன்றி ஏங்குதம்மா எந்நாளும்
பாதியிலே எமைவிட்டுப் போய் விட்டாய்
பாசத்தை நாம் காட்ட யாருமில்லை
இறையடியே நிஜமென்று எண்ணினாயோ
இன்றல்ல என்றும் நீ இருப்பாய் எம் நெஞ்சமதில்.

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா,
சகோதரர்கள், சகோதரிகள், அத்தான்,
உறவினர்கள், நண்பிகள்.

வேளாதோப்பு,
கல்வியங்காடு. [16287]

## கண்ணீர் அஞ்சலி

### சரவணமுத்து செல்வராசா

யாழ். இந்துக்கல்லூரியின் மூத்த பழைய மாணவர்களில் ஒருவரும், எமது சங்கத்தின் உபதலைவர்களில் ஒருவரும், கல்லூரியின் வளர்ச்சியில் அதிக அக்கறையுடன் ஈடுபட்டு வந்தவருமாகிய சரவணமுத்து செல்வராசா அவர்களின் மறைவிற்கு எங்கள் அஞ்சலி. துயர் அடைந்துள்ள உற்றார், உறவினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

பழைய மாணவர் சங்கம்,
யாழ். இந்துக்கல்லூரி.

[சி/5907]

## மரண அறிவித்தல்

### திரு. வேலுப்பிள்ளை எதிர்வீரசிங்கம்

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை எதிர்வீரசிங்கம் அவர்கள் 30 03 91 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மீனாட்சியின் [இளைப்பாறிய ஆசிரியை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி] அன்புக் கணவரும், ஜெயவேல் [கனடா], ஜெயமளா, கஜானி [ஆசிரியை, கொழும்பு], நிரஞ்ஜனி [மாணவி, யா. ப. க. நுண்கலைப்பிரிவு] ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வநாயகம் [இளைப்பாறிய தபால் அதிபர்], வட்டுக்கோட்டை காலஞ்சென்ற திருமதி தங்கமுத்து சண்முகநாதன், திருமதி சிவகாமன் செல்வத்துரை, திருமதி கற்பகம் வைத்திலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி ப. செல்வநாயகம் [மச்சி] அவர்களின் அன்பு மைத்துனரும், பாலஸ்கந்தன் [கனடா], உஷா [கனடா] ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெபஸ்கந்தன், கிரிஷாந்தி, லக்ஷ்மி, ஹரன், கண்ணன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-03-91 சனிக்கிழமை நடைபெற்றது என்பதைக் கவலையுடன் அறியத்தருகிறோம்.

''மீனகிரி''
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

[16288]

## நாகபூஷணி வருடாந்த மகோற்சவம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவத்தை இந்த ஆண்டு நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் தெரிவித்தார்.

சென்ற வருடம் யுத்தம் நடந்ததால் வருடாந்த உற்சவம் இடம்பெறவில்லை. எனினும் முறையான பிராயச்சித்தம் பூசை செய்து இம்முறை மகோற்சவம் ஆனி மாதத்தில் நடைபெற உள்ளது

ஆலயத்தின் வரலாற்றினைக் கொண்ட 'நாகம் பூசித்த நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்' என்ற [illegible] வெளியிட்டுள்ளது. [அ]

## மரண அறிவித்தல்

### செல்லையா சந்திரசேகரம்

[காப்பாளர், வ. பி. போ. சபை, கோண்டாவில் சாலை]

செல்லையா சந்திரசேகரம் [காப்பாளர், வ. பி. போ. சபை, கோண்டாவில் சாலை] அன்னார் 30 - 03 - 91 இல் காலமானார். இவர் செல்லையா முத்தம்மா அவர்களின் ஏக புத்திரனும், அம்பாள் துணையின் அருமைக் கணவரும், சுகந்தினி, சுரேஸ்காந்தன் [சுவிஸ்], றமேஸ்காந்தன், றஜனிகாந்தன் றஜீவ்காந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வவுனியா வேப்பம் குளத்தைச் சேர்ந்த 'இராமஜெயம்' அரிசி ஆலை உரிமையாளர் B. இராமச்சந்திரனின் மைத்துனருமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 31 - 03 - 91 அவரது இல்லத்தில் நடைபெற்றது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ச. அம்பாள்துணை (மனைவி)

பத்தமேனி,
அச்சுவேலி.

[16292]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புங்குடுதீவில் தண்ணீர் பஞ்சம்

புங்குடுதீவு, ஏப். 3

புங்குடுதீவில் தற்பொழுது தண்ணீர்ப் பஞ்சம் நிலவுகிறது.

தண்ணீருக்காக இப்பகுதி மக்கள் பல மைல் தூரம் நடக்க வேண்டி உள்ளது. கால்நடைகளும் தண்ணீருக்காக அலைகின்றன. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சர்வோதயம் ஆகியன தமது பவுசர்களை குடி தண்ணீர் விநியோகத்துக்காக பயன்படுத்துகின்றபோதிலும் இவை வியாபார நோக்குடனேயே செயலாற்றுகின்றன என்று முறையிடப்பட்டுள்ளது. [இ-131]

# உரம், இருமிநாசனி தடைகளை நீக்கக் கோரிக்கை

## கூட்டுறவுச் சபை மகஜர்

யாழ்ப்பாணம், ஏப். 3

விவசாய அபிவிருத்திக்குத் தேவைப்படும் உரம், இருமிநாசினி, மண்ணெண்ணெய் ஆகியவற்றைப் பெறுவதில் இருந்து வரும் தடைகள் நீக்கப்பட வேண்டும்.

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை யாழ். அரசாங்க அதிபரிடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான தீர்மானம் கடந்த 30 ஆம் திகதி நல்லூர் ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெற்ற ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அடங்கிய மகஜர் ஒன்றை யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு சி. சிவமகராஜா யாழ். அரசாங்கஅதிபருக்கு அனுப்பி உள்ளார்.

கிராமிய வங்கிகள் ஊடாக ஓய்வூதியம் பெறுபவர்கள் எதிர்நோக்கும் சிரமங்களைக் குறைப்பதற்கு மேலதிக திரவ நிதியை சங்கத்துக்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. [இ]

## விஞ்ஞான சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 3

எதிர்வரும் 5 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் ஏற்பாடு செய்துள்ள கலந்துரையாடல் ஒன்று. யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

இக்கலந்துரையாடல், 'பரம்பரையலகு மாற்றம்— மனிதகுல முன்னேற்றத்திற்காக மனிதனில் கிடைக்கக் கூடியவற்றின் உயிரியலிலும் வலிமையான தொழில் நுட்பத்திலும் ஏற்படும் மாற்றம்' என்னும் தலைப்பில் யாழ் பல்கலைக்கழக தாவரவியற் துறை பேராசிரியர் கே. தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறும். [இ-த]

# வல்வையில் பிடிபட்ட நால்வர் நயினாதீவில் விடுவிப்பு

புங்குடுதீவு, ஏப். 3

கடந்த மாதம் 5 ஆம் திகதி வல்வெட்டித்துறையில் வைத்துக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட நால்வர் பெரும் இன்னல்கள் மத்தியில் கடந்த வியாழக்கிழமை தனியார் படகு ஒன்றில் ஏற்றப்பட்டு புங்குடுதீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வைத்தியநாதன் வடிவேலழகன் [வயது 29] நடனகாமணி ரவீந்திரராஜா [வயது 32], பருத்தித்துறையைச் சேர்ந்த சுப்பிரமணியம் பத்மநாதன் [வயது 26], மாதகலைச் சேர்ந்த முத்தையா எதிர்வீரசிங்கம் [வயது 30] ஆகியோரே இந்த நால்வரும் ஆவர்.

கடந்த மாதம் 5ஆம் திகதி கடலில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்ட இவர்களிடம் இருந்த பொருள்களை படையினர் பறிமுதல் செய்திருந்தனர் என்றும் —

26 ஆம் திகதி வரை காங்கேசன்துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்னர் காரைநகர் கடற்படை முகாமுக்கும், பின்னர் நயினாதீவு முகாமுக்கும் இவர்கள் படையினரால் அழைத்து வரப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை இரவு தனியார் படகு ஒன்றில் புங்குடுதீவு குறிகாட்டுவான் இறங்குதுறையை வந்தடைந்த இவர்கள் விடுதலைப் புலிகளால் பொறுப்பேற்கப்பட்டு சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். [இ-131]

## புங்குடுதீவு பண்ணை மினிபஸ் சேவை

புங்குடுதீவு தனியார் போக்குவரத்துக் கழகம் தனது இரண்டு மினிபஸ்களை கடந்த வாரம் தொடக்கம் சேவையில் ஈடுபடுத்தி வருகிறது.

குறிகாட்டுவானில் இருந்து யாழ்ப்பாணம் பண்ணை தாம்போதி வரை இச்சேவை நடத்தப்படுகிறது.

புங்குடுதீவில் இருந்து பண்ணை வரை பிரயாணம் செய்யும் ஒருவருக்கு கட்டணமாக ரூபா 60 வசூலிக்கப்படுகின்றது. [இ-131]


## முக்கிய அறிவித்தல்

கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே கல்வி நிறுவனமாக விளங்கும்

BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தற்போது

பாரதிதாசன் கல்வி நிறுவனம்

"அறிஞர் தம் இதய ஓடை ஆழநீர் தன்னை மொண்டு செறிதரும் மக்கள் எண்ணம் செழித்திட ஊற்றி ஊற்றிப் புதியதோர் உலகம் செய்வோம்"

எனப் பெயர் மாற்றம் பெற்று

தனித்துவம் வாய்ந்த அதே விரிவுரையாளர் குழுவுடன் இயங்குகின்றது.

★ A/L 92 வார இறுதி வகுப்பு

★ A/L 91 பகல் நேர வகுப்பு

ஆகிய புதிய வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளது. மாணவர்கள் தமது பெயர்களை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

சித்திரையில் முத்திரை பதித்திட்ட முத்தமிழ் விழா சிறப்புற நடைபெற வாழ்த்தும்

நிறுவன இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்

[சி-5901]


# கிராமங்கள், வீடுகள் தோறும் அலங்கார வளைவுகள், பந்தல்கள்

## முத்தமிழ் விழாவை முன்னிட்டு முடிவு

மானிப்பாய், ஏப். 03

முத்தமிழ் விழாவைப் பிரதிபலிக்கக்கூடியதாக கிராமங்கள்தோறும் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட வேண்டும், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த அனைத்து பொது ஸ்தாபனங்கள், நிறுவனங்கள் யாவும் பேதமின்றி ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு முத்தமிழ் விழாவுக்கு ஆதரவு நல்குவது குறித்து ஆராய்வதற்காக நடைபெற்ற பொது அமைப்புக்களின் கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரியில் நடைபெற்ற இக்கலந்துரையாடலின் போது சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பளை, சங்கானை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த பல பொது ஸ்தாபனங்கள் பல கலந்து கொண்டன.

சனசமூக நிலையங்கள், சிற்றூர் அவைகள், விவசாயக் கழகங்கள் போன்ற பொது அமைப்புக்களின் உறுப்பினர்கள் முத்தமிழ்விழா ஏற்பாடுகள் குறித்துக் கலந்துரையாடினர்.

மேற்சொன்ன நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அதிகமான சனசமூக நிலையங்கள் உள்ளனவென்றும், அவற்றின் உதவிகள் கோரப்பட்டு விழாவைச் சிறப்பாக நடத்துவது எனவும் முடிவெடுக்கப்பட்டது.

இம்மாதம் 6ஆம், 7ஆம் திகதிகளில் மானிப்பாயில் நடைபெறும் விழாவுக்கு முன்பதாக அலங்கார வளைவுகள், தண்ணீர்ப்பந்தல்கள், வீட்டு அலங்காரங்கள் அமைக்கப்படுவதுடன், கிராமங்கள், வீதிகள் போன்றவற்றைத் துப்புரவு செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

முத்தமிழ் விழாவை முன்னிட்டு ஓவியங்கள், பட்டிமன்றங்கள், நாடகங்கள் போன்றவற்றை விழாவைப் பிரதிபலிக்கக்கூடிய முறையில் கிராமம் கிராமமாக நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

முத்தமிழ் விழாவையொட்டி அமைக்கப்படும் அலங்கார வளைவுகளில் பிரிவு ரீதியாக தெரிவு செய்யப்படும் சிறந்த மூன்று வளைவுகளுக்கு பரிசுகளும் வழங்கப்பட உள்ளன. [அ-90]

## சில பகுதிகளில் ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, ஏப்ரல் 3

மன்னார் தீவு, வவுனியா நகரம் மற்றும் வவுனியா தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆகிய பகுதிகளில் நேற்றுக் காலை முதல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்த இரு மாவட்டங்களின் ஏனைய பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து அமுல் நடத்தப்பட்டு வருவ[illegible] அறிவித்துள்ளது.

## ஆஸ்பத்திரி ஊழியருக்கு ம. எண்ணெய்

யாழ்ப்பாணம், ஏப் 3

யாழ். போதனா வைத்திய சாலை ஊழியர்கள் ஒவ்வொருவருக்கும் தலா மூன்று லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

லீற்றர் 10 ரூபா வீதமே ஊழியருக்கு அந்த மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. [அ 3]


உரும்பராயில்

COMPUTER PROGRAMMING

★ Basic Language
பயிற்சிக் காலம் 02 மாதம்

★ Word Star
[Word Star 2000 +]
Duration 03 Weeks

★ Lotus 1-2-3 (Accountancy Package)
Data Entry
[Including CIMA Stage II Students]
Duration 03 Weeks

★ D Base III+
Duration 04 Weeks

ஆரம்பம்: 06-04-1991

★★ சேர விரும்புவோர் உடன் நேரில் வந்து விண்ணப்பிக்கவும்.

ஆர்வமுள்ள அனைவரும் — இருபாலாரும் சேரலாம்

நேரில் வரவும்

JAFFNA CENTRAL ACADEMY

[நகை மாளிகை அருகாமை]

உரும்பராய் சந்தி, உரும்பராய்.

[162[illegible]



ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

எம்மிடம் கொடுத்த கலர்ப் பட சுருள்களின் பிரதிகளை [Photo Prints] வாடிக்கையாளர்கள் விரைவில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். [சி-5905]



வெளிவந்துவிட்டது - விற்பனையாகின்றன

S. L. E. A. S. பரீட்சைக்கான வழிகாட்டி

நுண்ணறிவு / கிரகித்தல் / விடயஆய்வு

[நடைபெற்ற பரீட்சை வினா - விடைகளுடன்]

கேட்டு வாங்குங்கள் - அஸ்ரன் வெளியீடு.

[எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம்]

[சி-4818]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஆரம்ப சுகாதார வழி காட்டி பேராசிரியர் த. இராமதாஸ் F. R. C. P. D.C.H. [குழந்தை வைத்தியத்துறை, மருத்துவ பீடம்] எழுதியது; கல்லூரி, நூலகங்கள் மற்றும் முதலுதவி போன்ற அனைத்து சுகாதாரப் பகுதியாளர்களுக்கும் ஓர் அரிய புத்தகம். வெளியீடு: உதயன் வெளியீட்டகம் விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாபாணம். [சி/4822]

### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும், வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத் தன்மைகளுக்காக 9 வகை மூலிகைகளினால் தயாரிக்கப்பட்டது. கிடைக்கும் இடம் எஸ். ரி; மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [4002]

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. தூர இட மாணவர்களுக்கு சனி, ஞாயிறு வகுப்புகள் 30-3-91 இல் ஆரம்பமாகியுள்ளன. 80 ஆம் திகதி நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்களை பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [16302]

### கூறுவிலை

நல்லின பசுக்கன்றுகள் மூன்றும், நாம்பன் கன்றுகள் இரண்டும் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் 10-04-91க்கு முன்னர் கூறுவிலையை சமர்ப்பிக்கவும்; மேலதிக விவரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்: யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. [சி/5900]

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரிக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். "சக்தி சரவணா" 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [16278]

### வாடகைக்கு

யாழ். பஸ் நிலைய சூழலில் கடையொன்று உடன் வாடகைக்கு உண்டு. தொடர்பு: Evertune Electric Complex தாவடிச் சந்தி, தாவடி. [16263]

### விற்பனைக்குண்டு

பென்டம் Bantom கோழி முட்டைகள் தொடர்பு 131/1, அம்பலவாணர் றோட், அத்தியடி, யாழ்ப்பாணம். [16304]

### மணமகன் தேவை

நல்ல வசதியும் தொடர்புமுடைய இந்துப் பெற்றோர் தமது 29வயது பட்டதாரி ஆசிரியைக்கு மணமகனைத் தேடுகின்றனர். மணமகள் மேற்படிப்பில் ஈடுபட்டுள்ளார். நட்சத்திரம் சதயம் செவ்வாய் குற்றமில்லை, Professionals, Lecturers & Executives Preferred, சாதகம் மற்றும் முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 199, C/o உதயன், யாழ்ப்பாணம். [16289]

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 01 — 03 — 1926

மறைவு: 04 — 03 — 1991

## அமரர் சின்னத்துரை தருமலிங்கம்

அன்புச் சுடரால் அனைவருக்கும் ஒளியூட்டி
கனிவான மொழியாலே கவலைதனை உடனகற்றி
துன்பச் சடலுள் துடியாகத் துடிக்கவிட்டு
என்பு எல்லாம் உருக ஏங்க வைத்துச் சென்றுவிட்டீர்.
அணைந்த விளக்கல்ல அணையாத தீபம் அப்பா
உதிர்ந்த மலரல்ல உயிரூட்டும் மலர் அப்பா
சரிந்த உடலல்ல சலிக்காத மனம் அப்பா
எரிந்து போனதெங்கே? எழுந்து வரமாட்டீரோ?
அப்பப்பா வருவார் அழைத்துச் செல்லப் பள்ளியிலே
அம்மப்பா வருவார் எமைப்பார்க்க ஜேர்மனிக்கு
அப்பா வருவார் அலையாமல் கூட்டிச் செல்ல
இனி அப்பா யார்வருவார் எம்மையெல்லாம்
வழிநடத்த

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் - தங்கராசா, புனிதா,
பேரப்பிள்ளைகள் - பபின்சி,
டென்சி, நிசாந், விதுனா, சபிந்.

நெட்டிலைப்பாய்,
கோண்டாவில். [16286]

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



## அமரர் இராசரத்தினம் துரைராசா

[Retired R. M. P.]

மலர்வு: 24 - 10 - 1919

உதிர்வு: 04 - 03 - 1991


கண்ணை இமை காப்பது போல எங்களைக் காத்து வாழ்வில் வழிகாட்டியாய் இருந்த நீங்கள் விண்ணில் நின்றும் வழிகாட்டி ஆசீர்வதிக்க இறைவனை வேண்டி, உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"ஜெயவாசம்",
பிளவதுரை, [illegible] [16301]

---

## அந்தியேட்டி - வீட்டுக்கிரியை அழைப்பிதழ்



புங்குடுதீவு

## அமரர் நாகலிங்கம் நடராசா

(இளைப்பாறிய அதிபர்)

தோற்றம்: 1921-07-27

மறைவு: 1991-03-06

காலம்: 1991-04-03 இன்று புதன்கிழமை காலை 6-00 மணிக்கு அந்தியேட்டி - கண்ணகை அம்மன் கோவில் மடம், 1991-04-05 வெள்ளி நண்பகல் 12-00 மணிக்கு வீட்டுக்கிரியை- இல்லம்.

அன்புடையீர்,

மேற்படி நிகழ்ச்சிகளில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்தித்து மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கிறோம்.

நன்றி.

மனைவி, மக்கள், மருமக்கள்

'சிவபதி'
புங்குடுதீவு-3 [16271]

---

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 3 - 8 - 1986

மறைவு: 4 - 3 - 1991

## கமலநாதன் ஹேமலதன்

4 - 3 - 1991 அன்று காலஞ்சென்ற எங்கள் அன்புச் செல்வம் ஹேமலதனின் ஆத்ம சாந்திக் கிரியைகள் 3 - 4 - 91 (இன்று) புதன்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பிரார்த்தனையில் பங்குபற்றி, மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

எங்கள் அன்புச்செல்வம் எம்மைவிட்டுப் பிரிந்த செய்தி கேட்டு வந்து ஆறுதல் கூறியோர்க்கும், மரணச் சடங்கில் பங்கு பற்றியோர்க்கும், அநுதாபக் கடிதம் அனுப்பியோர்க்கும், மற்றும் தேவை அறிந்து உதவி செய்த அனைவர்க்கும் எம்முடைய நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

செ. கமலநாதன்,
குடும்பத்தினர்.

மூத்த நயினார் கோவில்
ஒழுங்கை, ஆனைக்கோட்டை. [16284]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தேசியத் தலைவர் தலையெடுப்பாரா?

வடக்கு-கிழக்குத்தவிர்ந்த ஏழு மாகாணங்களிலும் அடுத்த மாதம் பதினோராம் திகதி உள்ளூராட்சிசபைகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல்கள் முடிந்த பின்னர் தான் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசாங்கம் முழுக் கவனம் செலுத்தும் என்று ஜனாதிபதி பிரேமதாச அறிவித்திருக்கிறார். இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு முன்னோடியாக, சித்திரைப் புதுவருடத்துடன் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் அரசாங்கம் ஆர்வமாக இருந்ததாக முன்னர் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இப்போது அரசின் ஒலித்தட்டு வேறு ராகம் பாடத் தொடங்கி உள்ளது!

இனப் பிரச்சினையை விட, உள்ளூராட்சித் தேர்தல் தான் அரசுக்கும், தென்னிலங்கை எதிர்க்கட்சிகளுக்கும் முக்கியமானதாகத் தெரிகிறது. அதிலிருந்து ஒன்று மட்டும் தெளிவாகப் புலனாகின்றது! மேலும் ஊர்ஜிதமாகின்றது என்றும் சொல்லலாம். தென்னிலங்கை அரசியல்வாதிகள், அவர்கள் அரசாங்க தரப்பில் இருந்தாலும் சரி, எதிரணியில் இருந்தாலும் சரி, தமது பதவிகளில் மட்டுமே அக்கறையாக இருக்கிறார்கள். நாட்டின் பிரதான விவகாரமாகி விட்ட, உயிர், உடைமை நாசங்களை உண்டாக்கி வருகின்ற இனப் பிரச்சினையை அவர்கள் தீர்க்க விரும்பவில்லை என்பதே மேலும் உறுதிப்படுத்தப்படுகிறது.

இனப் பிரச்சினையைப் பயன்படுத்தித் தமது வாக்கு வங்கிகளைப் பலப்படுத்துவதே இன்னமும் அவர்களின் குறிக்கோளாக இருந்து வருகிறது. இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டால் தமது அரசியல் தோற்றுப் போய் விடும் என்ற பயம் அவர்களை இன்னும் விட்டு நீங்கவில்லை.

மொத்தத்தில் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டியதன் அவசரம் மிகுந்த அவசியத்தை தென்னிலங்கை அரசியல்வாதிகள் இன்னும் உணரவில்லை. இனப்பிரச்சினையால்— அதன் பொருட்டு நடக்கும் யுத்தத்தால்— நாட்டு மக்களுக்கு, தமது சொந்த மக்களுக்கு ஏற்பட்டு வரும் பாதிப்பைச் சிங்கள மக்கள் பொருட்படுத்தாமல் இருக்கும் பொருட்டு அவர்களை வேறு திசைகளுக்குத் திருப்புகிறார்கள் அரசியல்வாதிகள் வேறு விடயங்களை மக்களுக்கு முன்னிருத்திக் காட்டி, இனப்பிரச்சினையின் தாக்கத்தை மறைக்கப் பார்க்கிறார்கள். அந்தத் தந்திரத்தின் ஒரு வடிவமே தென்னிலங்கையில் நடக்க இருக்கும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு அளிக்கப்படும் முன்னுரிமை எனலாம்.

சிங்கள மக்களை இப்படி எத்தனை காலத்துக்குத் திசை திருப்பி இனப்பிரச்சினையின் தாக்கத்தை அமுக்கி மறைத்து நாட்டைச் சீரழிக்க முடியும்? அந்த அமுக்கம் ஒரு நாள் வெடித்து தென்னிலங்கையை சின்னா பின்னப்படுத்தினால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அப்படி ஒரு நிலைமை உருவாகாமல் தவிர்ப்பதற்கு தென்னிலங்கையில் அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திக்கும் அரசியல் தலைவர்களுக்குப் பதிலாக நாட்டையும், மக்களையும் அடுத்த சந்ததியையும் பற்றிச் சிந்திக்கும் தேசியத் தலைவர் [Statesman] ஒருவராவது தேவை. அவர் எப்போது தலையெடுப்பார்?

# போராட்டம் தந்த மாற்றங்களை இலக்கியமாக வடிக்க வேண்டும்

## வெளியீட்டு விழாவில் ரவி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 3

''ஈழத்தில் எழுதப்படும் இலக்கியங்கள், எழுந்தமான இலக்கியப் போர்வையில் எல்லாக் கருத்துக்களையும் கூறாமல், விடுதலைப்போராட்டம் பற்றியும், அதன் விழுமியங்கள், தாக்கங்கள் குறித்தும், போராட்டத்தால் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியும் கலாபூர்வமாக வடிக்கும் எழுத்துக்களாக இருத்தல் வேண்டும்.''

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகள் 'மக்கள் முன்னணியின் வெளியீட்டுப் பிரிவைச் சேர்ந்த திரு. ரவி.

''செங்கை ஆழியான்'' எழுதிய 'குவேனி'' நூல்வெளியீட்டு விழா கடந்த திங்கட்கிழமை யாழ் பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. திரு. வளவை வளவன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

தமிழ்த்தாய் பதிப்பகத்தின் வெளியீடான'' குவேனி'' யை வெளியிட்டு வைத்துப் பேசுகையில் திரு. ரவி மேலும் தெரிவித்ததாவது:-

குவேனி பழைய கதையாக இருந்தாலும் அதனை ஆசிரியர் புதிய பார்வையில் தந்துள்ளார். பல எழுத்தாளர்களின் கருத்தை கவனத்தில் எடுத்துக் கொண்டு இனி நாம் வெளியிடும் தரமான இலக்கியங்களுக்கு ஊதியம் வழங்குவது எனத் தீர்மானித்துள்ளோம் – என்றார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி தமது உரையில் கூறியதாவது:-

குவேனி சிறுகதை என்ற ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு கதையாகும் செங்கை ஆழியானின் எழுத்தின் தன்மையை வாடைக்காற்று முதல் குவேனி வரை காணமுடிகிறது அத்துடன் அவரின் மொழி நடையில் படிப்படியாக அதிகரித்து வரும் ஒரு கனதியினை இப்போது காண்கின்றேன், இந்நூலில் மனிதர்களை, அவர்களின் பிரச்சினைகளை கதாபாத்திரங்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்; உதாரணமாக தாரதத்தன்வின் பாத்திரம் மூலம் சமூக நெருக்குதலின் முழு வெளிப்பாட்டையும் காணமுடிகிறது.

சிங்கள வரலாற்றாசிரியர்களிடையேகூட மகாவம்சத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் இருக்கிறார்கள். அதனை ஓர் ஐதீகமாக எடுத்துக் கொண்டாலும்கூட, அந்த ஐதீகத்தால் ஒரு நாட்டின் வரலாறே சிதைந்து போவதைக் காண்கின்றோம் — என்றார்.

கலாநிதி சோ. கிருஷ்ணராசா பேசுகையில்—

ஆசிரியர் இந்நாவல் மூலம் சமூகத்திற்கும் தற்காலத்திற்கும் தேவையான பல செய்திகளைத் தெரிவித்துள்ளார். நமக்குத் தேவையான பொருள்கள் நம்மிடம் இருக்கும்போது அந்நியரிடம் பொருள்களை ஏன் வாங்க வேண்டும் என்ற கருத்துக்களுடன் பல வரலாற்றுத் தகவல்களையும் தந்துள்ளார்— என்றார்.

நூலின் முதல் ஐநூறு பிரதிகளை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சு. டிவகலாவா பெற்றுக்கொண்டார். [அ-த]

## தீர்வுக்கான யோசனையை அரசே முன்வைக்கவேண்டும்

### கம்யூ. செயலாளர் கோரிக்கை

கொழும்பு, ஏப். 2

வடக்கு - கிழக்கில் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் அரசாங்கமே அரசியல் தீர்வுக்கான யோசனையை முதலில் முன்வைத்து சகல கட்சிகளுடனும் பேசி நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முன்முயற்சி எடுக்க வேண்டும்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் கே. பி. சில்வா முன்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

கட்சியின் 14 ஆவது தேசிய மாநாடு கொழும்பு புதிய நகர மண்டபத்தில் கடந்த வெள்ளி ஆரம்பமானது.

வடபகுதியில் இருந்து பத்துப் பேரைக் கொண்ட குழுவும் மாநாட்டில் கலந்து கொண்டது என்று தெரிவிக்கப்பட்டது.

அங்கு திரு. கே. பி. சில்வா மேலும் சொன்னதாவது;-

நியாயத்திற்காகவும், அடிப்படை உரிமைகள் மற்றும் சுயநிர்ணய உரிமைகளுக்காகவுமே தமிழ் பேசும் மக்கள் இன்று போரிடுகிறார்கள். இராணுவ நடவடிக்கை மூலம் தேசிய இனத்தின் போராட்டத்தை நசுக்க, அடக்க முடியாது.

இனப்பிரச்சினையத் தீர்க்காமல் நிரந்தர அமைதியையோ, பொருளாதார விருத்தியையோ எதிர்பார்க்க முடியாது.

நாட்டைப் பிரிக்காது, தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து பிரதேச சுயாட்சியும் போதிய அதிகாரங்களும் அவர்களுக்கு வழங்க வேண்டும்.

மாகாணசபையின்கீழ் உரிய முறையில் அதிகாரப் பரவலாக்கல் இடம்பெறவில்லை — என்றார் அவர். [உ-எ]

# கிளிநொச்சியில் ஊரடங்கு

கொழும்பு, ஏப். 3

கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தில் நேற்று [செவ்வாய்] முதல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டிருப்பதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. [உ]

# சீ-பிளேன் நோட்டம்

குருநகர், ஏப். 2

நேற்று நண்பகல் 11 மணியளவில் இரு தடவைகள் சீ-பிளேன் ஒன்று தீவுப்பகுதிகளுக்கு மேலாக வட்டமிட்டுச் சென்றது.

மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், சரவணை வேலணை, புளியங்கூடல். நாரந்தனை, கரம்பொன், சுருவில் பகுதிகளுக்கு மேலாகவே அது பறந்து நோட்டமிட்டுச் சென்றது [உ-51]

# சங்கீத சபை பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 3

வட இலங்கை சங்கீத சபையினர் நடத்தவிருந்த பரீட்சை, கருத்தரங்கு, மற்றும் ஆறாந்தரத்தில் சித்தியெய்தியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் ஆகியன தவிர்க்கமுடியாத காரணங்களினால் பின்போடப்பட்டிருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக யாழ். இந்து மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெற இருந்த கூட்டமும் பின்போடப்பட்டிருக்கிறது. [உ-5]

# குர்டிஷ் போராளிகளுடன் அமெரிக்கா பேச இணக்கம்

வாஷிங்டன், ஏப். 3

குர்டிஷ் இனப்போராளிகளின் பிரதிநிதிகள் குழு ஒன்றுடன் பேச்சுக்கள் நடத்த அமெரிக்க வெளியுறவு அமைச்சு நேற்று இணக்கம் தெரிவித்தது.

இனக்கொலையில் இருந்து குர்டிஷ் மக்களைக் காப்பாற்றும்படி குர்டிஷ் மக்கள் சார்பில் அவர்களின் தலைவர்கள் விடுத்த அவசர வேண்டுகோளைத் தொடர்ந்து, அமெரிக்கா புதிய நிலைப்பாட்டை எடுத்தது.

ஆனால் அமெரிக்காவின் இந்த அறிவிப்பு காலம் பிந்திய ஒன்று என்று லண்டனில் அரசு அதிகாரிகள் அறிவித்தனர்.

குர்டிஷ் போராளிகளின் கிளர்ச்சியை சதாமின் படைகள் பெரும்பாலும் முறியடித்து விட்டன என்று கூறப்படுகிறது. [அ-எ]

# சக்கரம், தாமரை, இரட்டை இலை சின்னங்களுக்கு நடக்கும் போட்டி

புதுடில்லி, ஏப்ரல் 3

சக்கரம், தாமரை, இரட்டை இலை ஆகிய தேர்தல் சின்னங்கள் குறித்த தகராறுகளை இவ்வாரம் விசாரித்து முடிவு எடுக்கப் போவதாக இந்திய பிரதம தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் தெரிவித்திருக்கிறார்.

முன்னாள் பிரதமர் வி. பி. சிங் தலைமையிலான ஜனதா தள் கட்சியின் தேர்தல் சின்னமாக சக்கரம் இருக்கிறது. 1989 தேர்தலில் சக்கரம் சின்னத்தில்தான் ஜனதா தள் போட்டியிட்டது.

1990 நவம்பரில் ஜனதா தள் பிளவுபட்டு சந்திரசேகர் அணி உருவாகி, அது பின்னர் ஜனதா தள் [எஸ்] என்று அங்கீகரிக்கப்பட்டது.

இப்போது சந்திரசேகர் அணி தமது கட்சிதான் ஒரிஜினல் ஜனதா தள் என்றும் ஆகவே 'சக்கரம்' சின்னம் தமது கட்சிக்கே வழங்கப்பட வேண்டும் என்றும் முறையிட்டுள்ளது.

### தாமரை

பாரதீய ஜனதாக் கட்சியின் தேர்தல் சின்னம் தாமரை. அச்சின்னத்தில் 1989லும் பாரதீய ஜனதா போட்டியிட்டது.

1990 அக்டோபரில் ராமர் கோயில் கட்டுவது தொடர்பாக பாரதீய ஜனதா நடத்திய ரத யாத்திரையில் தாமரை சின்னம் உபயோகப் படுத்தப்பட்டது.

தேர்தலுக்குத் தவிர வேறு காரணங்களுக்கு அச்சின்னம் பயன்படுத்தப்பட்டிருப்பதால் பாரதீய ஜனதாக் கட்சி அச்சின்னத்தை உபயோகப் படுத்துவதற்கு தடைவிதிக்கும்படி கோரி தேர்தல் கமிஷனுக்கு இந்திரா காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான திரு. அர்ஜுன் சிங் முறையிட்டிருக்கிறார்.

### இரட்டை இலை

எம். ஜி. ஆர். ஸ்தாபித்த அ. தி. மு. கவின் தேர்தல் சின்னம் இரட்டை இலை.

எம். ஜி. ஆர். மறைந்த பின்னர் அ. தி. மு. க. ஜெயலலிதா அணி, ஜானகி அணி என பிளவுபட்டன.

இரண்டு அணிகளும் இரட்டை இலை சின்னத்தைக் கோரவே தேர்தல் கமிஷன் அதனை எந்த அணிக்கும் வழங்காமல் முடக்கி வைத்தது. அதன் காரணமாக 1988 சட்டசபைத் தேர்தலில் ஜானகி அணி புறா சின்னத்திலும் ஜெயலலிதா அணி சேவல் சின்னத்திலும் போட்டியிட்டன.

அதன் பின்னர் இரு அணிகளும் இணைந்தன. இணைந்த அ. தி. மு. கவுக்கு மீண்டும் இரட்டை இலைச் சின்னம் வழங்கப்பட்டது.

1989 நவம்பர் தேர்தலில் அ. தி. மு. க. நாடாளுமன்றத் தேர்தலில் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்டது.

1990இல் மீண்டும் அ. தி. மு. க. பிளவுபட்டது. முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு தலைமையிலான அணி அ. தி. மு. க.-2 என்று சபாநாயகரால் அங்கீகரிக்கப்பட்டது.

இப்போது தனது கட்சியே ஒரிஜினல் அ. தி. மு. க. என்றும் அதற்கே இரட்டை இலைச் சின்னம் வழங்கப்பட வேண்டும் என்று திருநாவுக்கரசு கோரியிருக்கிறார்.

இதே வேளை— அ. தி. மு. க. [ஜானகி அணி] எம். எல். ஏ. ஆக கலைக்கப்பட்ட சட்டசபையில் இருந்த முன்னாள் சபாநாயகர் தா. பாண்டியனும் தனது கட்சிக்கே இரட்டை இலை சின்னம் தரப்பட வேண்டும் என்று கோரியிருக்கிறார். ஆனால் இவரது கோரிக்கையை கடந்த திங்களன்று தேர்தல் ஆணைக்குழு நிராகரித்துத் தீர்ப்பு வழங்கிவிட்டது. [இ-எ]

# 200 படையினர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மொத்தம் இருநூறுக்கும் அதிகமான படையினர் உயிரிழந்திருக்கிறார்கள்.

வடக்கு, கிழக்கில் புலிகளின் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப் பட்டிருப்பது அரசாங்கத்திற்கும், பாதுகாப்புப் படையினருக்கும் பெரும் நெருக்கடியைக் கொடுத்திருப்பதாகவும் செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை ஒட்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளில் அரசு கவனம் செலுத்த வேண்டியிருக்கும் இவ்வேளையில் வடக்கு, கிழக்கில் திடீர் தாக்குதல் சம்பவங்களை விடுதலைப் புலிகள் வெற்றிகரமாக நடத்தி முடிப்பது அரசுக்கு அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் பெரும் தலையிடியைக் கொடுப்பதாக உள்ளது. என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது. [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலுப்படிச்சேனையில் 2 வேங்கைகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஏப் 3

மட்டக்களப்பு மாவட்டம் கரடியனாறு முகாமிலிருந்து கடந்த திங்களன்று வெளியேறிய இராணுவத்தினர் மீது வேப்பவெட்டுவானுக்கும் இலுப்படிச் சேனைக்கும் இடையில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலினால் படையினருக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து தகவல்கள் கிடைக்கவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பில் அமலன் (மகாதேவன் இராஜேஸ் — குருக்கள்மடம் மட்டக்களப்பு) குகநாதன் [இ. ரணசிங்கம் — காரைதீவு, அம்பாறை] ஆகிய இரு போராளிகளும் வீர மரணம் அடைந்தனர். [உ]

# கொழும்பில் இயலாதது இங்கே திருத்தப்பட்டது!

திருத்த முடியாத ஒன்று எனக் கொழும்பில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட ''எக்ஸ்றே'' இயந்திரம் ஒன்று, யாழ்ப்பாணத்தில் திருத்திப் பாவிக்கப்படுகிறது!

அதனைத் திருத்துவதற்குத் தேவையான உதிரிப்பாகங்கள் அனைத்தும் யாழ்ப்பாணத்திலேயே தயாரிக்கப்பட்டு மாற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு இங்கேயே திருத்தப்பட்ட ''எக்ஸ்றே'' இயந்திரம் யாழ். போதனா ஆஸ்பத்திரிக்குச் சொந்தமானது. அதனைத் திருத்தி இயங்க வைத்துள்ளவர்கள் சிமெந்து தொழிற்சாலை இயந்திரப் பொறியியலாளர்.

இந்த 'மொபைல்' எக்ஸ்றே' இயந்திரம் திருத்தப்பட்டதால்தான், யாழ் ஆஸ்பத்திரியில் இப்போது பத்துச் சதவீதமான ''எக்ஸ்றே'' படங்களையாவது எடுக்க முடிகிறது!

யாழ். ஆஸ்பத்திரியில் உள்ள மூன்று பெரிய 'எக்ஸ்றே' இயந்திரங்களும் ஏற்கனவே பழுதடைந்து அவையும் சிமெந்து தொழிற்சாலைப் பொறியியலாளர்களால் திருத்தப்பட்டுள்ளன ஆனால் அவற்றை இயக்குவதற்குப் போதிய மின்சார வசதி இல்லாததால் பாவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஜப்பான் அரசாங்கம் வழங்கும் புதிய 'எக்ஸ்றே' இயந்திரம் ஒன்று இவ்வாரம் இங்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதனைப் பொருத்துவதற்காக ஜப்பானியப் பொறியியலாளர் ஒருவர் இங்கு வருவார் [அ-15]

# நல்லூரில் மட்டுமே பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஏப் 3

தமிழர் மீதான அட்டூழியங்களை ஆட்சேபித்தும் தமிழ் மக்கள் படும் துன்பங்களை நீக்கவும் இறையருள் வேண்டி நடத்தப்பட இருக்கும் சர்வமதப் பிரார்த்தனை நாளை மறுதினம் நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் மட்டுமே நடைபெறும். ஏற்கனவே திட்டமிட்டபடி உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகள் தோறும் பிரார்த்தனைகள் நடத்தப்படமாட்டா என்று ஏற்பாட்டாளர்கள் நேற்றுத் தெரிவித்தனர்.

# நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஏப் 3

யாழ். மாநகர ஊழியர் கூட்டுறவு கடனுதவிச் சிக்கனச் சங்கத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், சங்கத்தின் உறுப்பினர்களாக இருந்து ஓய்வுபெற்றவர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சியும் இன்று பிற்பகல் 2 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நல்லூர் பண்டாரமாளிகை வளவினுள் அமைந்துள்ள சுகாதாரப் பகுதி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. த. சிவசுப்ரமணியம் தலைமையில் இந்த நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. [உ-5]

# தமிழகத்தில் ரயில்களை கவிழ்ப்பதற்கு முயற்சி!

சென்னை ஏப். 3

தமிழ்நாட்டில் தண்டவாளங்களில் பாறாங்கற்களை வைத்து ரயில்களைக் கவிழ்க்க நாசகாரசக்திகள் முயற்சித்து வருகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று தினங்களாக பல ரயில் பாதைகளில் பாறாங்கற்கள் வைக்கப்பட்ட சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது,

இதன் காரணமாக தமிழகத்தில் ரயில்களின் வேகம் மணித்தியாலத்திற்கு 90 கிலோ மீற்றரில் இருந்து 45 கிலோ மீற்றராக குறைக்கப்பட்டிருக்கிறது. [ . . ]

# இருதயபுரத்தில் பொலிஸ் பலி!

யாழ்ப்பாணம், ஏப். 3

கடந்த திங்களன்று மட்டக்களப்பு நகரிலிருந்து வந்த பொலிஸார் மீது காலை 10-30 மணியளவில் இருதயபுரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்ததாகவும்—

84 எஸ் ரகத்துப்பாக்கி -1, அதற்குரிய மகஸின் - 1, ரவைகள்-30 என்பன தங்களால் மீட்கப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]



# ஷப்றாவுக்கு எமது வாழ்த்துகள்!



கொழும்பில் புதிதாகத் தமது சொந்த அலுவலகக் கட்டடத் தொகுதியைத் திறந்து வைக்கும் ''ஷப்றா''வுக்கு எமது வாழ்த்துகள்!

★ உரிய நேரத்தில் வாடிக்கையாளர்களுக்கு உதவிய நிறுவனங்களில் ஷப்றாவும் ஒன்று.

★ அனுபவமும் நிபுணத்துவமும் மிகுந்த ஷப்றா நிர்வாகம் மக்களின் நம்பிக்கையையும் வளர்த்தெடுத்துள்ளது.

எதிர்காலத்திலும் ஷப்றா நிறுவனத்தின் நடவடிக்கைகள் வெற்றி பெற வாழ்த்துகிறோம்!

ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்

54, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்.


# ஆப்கான் அரசாங்கம் "ஸ்கட்" ஏவுகணைத் தாக்கு

காபூல், ஏப் 3

முஜாஹுதீன் கெரில்லாக்களிடம் வீழ்ச்சியடைந்த ஹோஸ்ற் நகர் மீது ஆப்கானிஸ்தான் அரசுப் படைகள் ''ஸ்கட்'' ஏவுகணைத் தாக்குதலை நடத்துவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது:

அரசுப் போர் விமானங்கள் மூலம் வான்தாக்குதல்களையும் மேற்கொண்டிருப்பதாகவும் பாகிஸ்தான் அதிகாரிகள் கூறினார்கள்.

'ஸ்கட்'' தாக்குதலில் பத்துப் பேர் உயிரிழந்தனர் என ஹோஸ்ற் நகரில் நிலைகொண்டுள்ள முஜாஹுதீன் கெரில்லாக்கள் தெரிவித்தனர்.

# உணவு முத்திரைக்குரிய விநியோகம் நிறுத்தம்

யாழ். - மாவட்டத்தில் உணவு முத்திரைக்குரிய பொருள்களை விநியோகிப்பதை [மார்ச் 31 ஆம் திகதியுடன்] நிறுத்தும் படி சமூக சேவைப் பகுதி யாழ் - செயலகத்தைப் பணித்துள்ளது.

உலர் உணவு நிவாரணம் தற்சமயம் வழங்கப்படுவதால் உணவு முத்திரை விநியோகத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ-3]

# பத்துப் பாடசாலைகள் உடனடியாகப் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஏப் 3

1990 ஜூன் மாதத்துக்குப் பின்னர் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்த பாடசாலைகளில் பத்துப் பாடசாலைகளை உடனடியாகத் திருத்தி அமைக்க யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு பிரிவு பணித்துள்ளது.

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயம், யாழ். சென் ஜேம்ஸ் வித்தியாலயம், அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம், மண்கும்பான் அ. த. க. பாடசாலை, வேலணை மகாவித்தியாலயம் கருவில் பாடசாலை அளவெட்டி ஞானோதயா வித்தியாலயம் நாரந்தனை பாடசாலை சின்னமடு பாடசாலை அல்லைப்பிட்டி சரஸ்வதி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளையே உடனடியாகத் திருத்தி அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

திருத்த வேலைகளைச் செய்து முடிப்பதற்குக் குறைந்தபட்சக் கொடுப்பனவை அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்துக்குத் தாம் வழங்கியுள்ளதாகவும் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயதிட்டப் பணிப்பாளர் அறிவித்திருக்கிறார். [அ-5]

# விடுமுறை

யாழ்ப்பாணம், ஏப் 3

யாழ். மாவட்டப் பாடசாலைகள் அனைத்தும் முதலாந் தவணை விடுமுறைக்காக நாளை மறுதினம் 5 ஆம் திகதி மூடப்படும் என வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இரண்டாம் தவணைக்காக மீண்டும் மே மாதம் 6 ஆம் திகதி பாடசாலைகள் திறக்கப்படும். ஆனால் ஜி. சி. ஈ உயர்தரப் பரீட்சைக்கு பரீட்சை நிலையங்களாகச் செயற்படும் பாடசாலைகள் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் என்றும் அவர் சொன்னார், [உ-5]

# 6 தமிழர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், ஏப். 3

கடந்த திங்களன்று மட்டக்களப்பு மாவட்டம் வேப்பவெட்டுவானுக்கும் இலுப்படிச்சேனைக்கும் இடையில் வைத்து ஆறு அப்பாவித் தமிழர்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ]

# விசேட நிவாரணம்

கடந்த சில நாட்களாக இடம் பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியுள்ள மக்களுக்கு ஒரு வார இலவச உலர் உணவு வழங்கப்படும்.

இதற்கான பணிப்புரையை சம்பந்தப்பட்ட உதவி அரச அதிபர்களுக்கு அரச அதிபர் விடுத்துள்ளார்.

காரைநகர், மற்றும் கீரிமலை, இளவாலை ஆகிய பகுதி மக்களுக்கே இந்த விசேட நிவாரணம் வழங்கப்படவுள்ளது. [அ-5]

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் நாகம்மா

நாகலிங்கம் நாகம்மா 2-4-91 இல் காலமாகிவிட்டார், இவர் [காலஞ்சென்ற] பரமேஸ்வரியின் அன்புத் தாயாரும், தில்லைநாதனின் மாமியாரும், கௌரி, சந்திரிகா, தங்கவேலுவின் அருமைப் பேத்தியும், நிசாதனா, டினேஸ் இன் அன்புப் பூட்டியும் ஆவார்:

அன்னாரின் ஈமைக்கிரிகைகள் இன்று 3-4-91 காலை 10.00 மணி அளவில் பத்தைமேனி கௌதங்கா வாசா இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரிகைகள் பத்தைமேனி மயானத்தில் நடைபெறும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
இ.தங்கவேலு

கௌதங்கா வாசா
பத்தைமேனி
அச்சுவேலி

[16306]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 03 - 04 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org